1973 பிப்ரவரி 5]

போட்டுக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அது முறையல்ல. ஆகவே, அப்படிப்பட்டவர்களின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : லைசென்ஸ் பெற்றவர்கள் தான் இந்தப் பணியில் ஈடுபடலாம். மற்றவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்று விதிகள் இருக்கின்றன. அதன்படி தண்டிக்கப் படுவார்கள்.

பெரியபாளையம் துணை மின் நிலையம்

* 19 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் பெரியபாளையம் துணை மின் நிலையத்தினை 110 K.V. மின் நிலையமாக மாற்றியமைக்கும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 110 கே. வி. துணை மின் நிலையம் பெரியபாளையத்திலிருந்து 13 கி.மி. தூரத்தில் உள்ள பஞ்சட்டியில் அமைக்கப்பட இருக்கிறது. இம்மின்நிலைய வேலை 1973—74 எடுத்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

Theft of idols.

* 20 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Religous Endowments be pleased to state—

(a) whether it is a fact that idols are being stolen by foreign agents and persons outside the State;

(b) if so, the steps taken to prevent the theft; and

(c) the value of idols stolen in 1971 and the value of the idols recovered?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) கோயில் சிலைகள் சில சமயங்களில் களவாடப்படுகின்றன. ஆனல் எப்பொழுதும் அயல்நாட்டினராலும், வெளிமாநிலத்தினராலும் களவாடப் படுவதில்லை.

(இ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரும், காவல்துறை அலுவலர்களும் கோவில் சிலைகள் களவாடலைத்

தடுக்க எடுத்துக்கொண்டுள்ள முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:—

(1) சிலைகள் களவைப் பற்றிய தகவலை உடனுக்குடன் காவல் துறையினருக்கு அறிவித்தல்.

(2) கோவில்களில் உள்ள சிலைகளின் புகைப்படத் தொகுப்புகளை வைத்தல்.

(3) தொல்பொருள்களை விற்பனை செய்வோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.

(4) ஓய்வுபெற்ற காவல்காரர்களை கோவில்களில் காவலர்களாக நியமித்தல்.

(5) சிலை களவாடலுக்கு யாருடைய கவனக்குறைவு காரணமாயிருந்ததோ, அந்த ஆலய ஊழியரின்மீது கடும் நடவடிக்கை எடுத்தல்.

(6) தொல்பொருள் மதிப்புள்ள சிலைகள் எங்கெல்லாம் பார்வைக்கு வைக்கப்படும் காலத்து சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் அமைத்தது.

(உ) 1971 ஆம் ஆண்டில் களவாடப்பட்ட சிலைகளின் மதிப்பு ரூ. 2,47,810.

கைப்பற்றப்பட்ட கோவில் சிலைகளின் மதிப்பு ரூ. 2,33,880.

திரு. கே. டி. கே. தங்கமணி: என்னுடைய கேள்வியிலே இம்மாதிரி களவாடியவர்களைப் பொறுத்தவரையில் வெளிநாட்டு ஏஜெண்டுகள், வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா என்று கேட்டிருந்தேன். அதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. சிலைகள் திருட்டில் ஈடுபட்டவர்களில் வெளிநாட்டு ஏஜெண்டுகள் உண்டா, வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அயல்நாட்டு ஏஜெண்டுகள், வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் சிலைகள் திருட்டில் ஈடுபட்டிருக்கிறார்களா என்று கேட்டார்கள். இல்லை என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

1973, பிப்ரவரி 5]

திரு. கே. டி. கே. தங்கமணி : வெளிநாட்டு ஏஜெண்டுகள் தனிப்பட்ட முறையில் இங்குள்ள சிலைகளைத் திருடி யிருக்கிறார்களா? அல்லது நம்முடைய இன்வெஸ்டிக்கேஷனில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் சில சிலைகளைத் திருடியதாக தெரிய வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : வெளிநாட்டிலுள்ளவர் களாலோ அல்லது வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களாலோ கோவில் சிலைகள் களவாடப்படவில்லை என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, சென்னை மாநகரிலே ஒரு சிலர் கோவில் சிலைகள் களவு குற்றத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? அது சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதுபற்றிய விபரங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, எங்கெங்கு கோவில் சிலைகள் திருடப்பட்டிருக்கின்றனவோ அந்த இடங்களில் எல்லாம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சென்னை மாநகரைப் பற்றிய விபரம் என்னிடம் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய சிலைகள் நாகரிகம், பண்பாடு, சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்ததாக இருப்பதனாலேயே, அதிலே மோகம் கொண்ட வெளிநாட்டிலுள்ளவர்கள் ஒரு சிலைக்கு 75 லட்சம் ரூபாய் கூட கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகையால் நாமாகவே அம்மாதிரியான சிற்பங்களைச் செய்து வெளிநாடுகளில் விற்பனைச் செய்தால், நாம் சிற்பிகளையும் ஊக்கப்படுத்தினவர்கள் ஆவோம்; அதே நேரத்தில் அந்நியச் செலாவணியும் நிறையக் கிடைக்கும். அதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நாகரீகமும் பண்பாடும் நிறைந்த சிலைகளை இப்போதும் சிற்பிகள் செய்துகொண்டுதான் வருகிறார்கள். அந்தத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு

அரசாங்கம் ஊக்கமளித்து வருகிறது. ஆனால் வெளிநாட்டுக்காரர்கள் ஆயிரம், ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள சிலைகளை அந்தக் காலத்திலேயே இந்த அளவுக்கு நாகரீகம், பண்பாடு வளர்ந்திருக்கிறதே என்ற ஆர்வத்தால், பழங்காலத்துச் சிலைகளை வாங்குவதற்கு விலைமதிக்க முடியாத பொருள்களை ஈடாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : *சார், மற்றப் பொருட்களைத் திருடுவதற்கும் கோவில் சிலைகளைத் திருடுவதற்கும் வேறுபாடு உண்டு. சிலர் பொருளீட்டுவதற்காகத் திருடலாம்; சிலர் பக்தியினால் திருடலாம். ஆகவே, இந்தத் திருட்டுகள் என்ன காரணத்தினால் நடைபெறுகின்றன என்பதை மனோதத்துவ ரீதியிலே கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : *தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிலைகள் பொருளீட்டுவதற்காகவும் திருடப்படலாம்; பக்தியினாலும் திருடப்படலாம் என்று சொன்னார்கள். ஆகவே, திருட்டு நடைபெறுவதற்கான காரணம் அவர்களது கேள்வியிலேயே அடங்கி இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(அ) 2—2—1973 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் பேருரையை நிகழ்த்துமுன் சில உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தது குறித்து.

MR. DEPUTY SPEAKER : Hon. Members are aware that on 2nd February 1973 when the Governor rose to address the hon. Members of both the Houses assembled together under Article 176 of the Constitution, hon. Members Thiruvalargal K. T. K. Thangamani, M. G. Ramachandran and A. R. Marimuthu, made certain statements and then accompanied by the Members of their parties staged a walk-out.